## வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் -2016

“சமூக அபிவிருத்தியின்றி பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்த முடியாது” என்ற தலைப்பினை அடிப்டையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டி இவ்வாண்டில் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டமானது கீழுள்ள பிரகாரம் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

01. போதைப்பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு, ஆத்மீக அபிவிருத்தியின் ஊடாக மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம்.
02. சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் கழக மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்கள்.
03. உளவளத்துனை, மற்றும் தொழில் வழிகாட்டலகள்.
04. சர்வதேச ஞாபகார்த்த தின வேலைத்திட்டம்.
05. திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டம்.
06. துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்.
07. விசேட தேவையுடையோர் நலன்புரி வேலைத்திட்டங்கள்.
08. மாதிரிக் கிராம வேலைத்திட்டம்.
09. முன்னேற்ற மீளாய்வு

### 01.போதைப்பொருள், புகைத்தல் தடுப்பு, ஆத்மீக அபிவிருத்தியின் ஊடாக மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம்.

“சமூகம் என்ற அணைக்கட்டின் பலமானத தனது குடும்பமாகும்” சமூகத்தினை மிக அழகான இடமாக ஆக்கக் கூடியது குடும்பத்தில் ஒருவருக்கொருவரிடை மிக நெருங்கியதாகவும், நேயமிக்கதாகவும், சிறந்த மனோநிலையினைக் கொண்ட ஒன்றாக்குவதன் மூலமாகும். தேசிய வேலைத்திட்டத்தோடு இணைந்து அபிவிருத்தியின் முக்கிய சவாலான மதுபானம், மற்றும் புகைத்தல் பாவனையினால் விடுவிக்கப்பட்ட மகிழ்ச்சிகரமான குடும்பம் ஒன்றினை உருவாக்குவது முக்கிய குறிக்கோளாகும். இதன் பொருட்டு குடும்பங்களின் வயதெல்லைக்கேற்ப கீழுள்ள பிரகாரம் குழுக்களாகி அதற்கமைய வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வது பொருத்தமானதாகும்.

- ❖ வயது 05 வருடங்களுக்குக் குறைந்த சிறுவர்கள் உள்ள குடும்பங்கள்
- ❖ 5-18 இற்கிடைப்பட்ட வயதுத்தொகுதியினையுடைய சிறுவர்கள் உள்ள குடும்பங்கள்
- ❖ 18-35 இற்கும் இடைப்பட்ட வயதினையுடைய தனிநபர் குழுக்கள்
- ❖ 35 வயதுக்கு மேற்பட்டோர் உள்ள சமூகக் குழுக்கள்

**(அ) 05 வயதிலும் குறைந்த மற்றும் 05-18 இற்கும் இடைப்பட்ட வயதுத் தொகுதிப் பிள்ளைகள் உள்ள குடும்பங்களை இனம்காணுதல்**

வாழ்வின் எழுச்சி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் 05 வருடங்களிலும் குறைந்த வயதினையுடைய பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் மற்றும் 15-18 இற்கும் இடைப்பட்ட வயதுத் தொகுதியினையுடைய பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் என வகைப்படுத்தி தெரிவு செய்து அக் குடும்பங்களின் பிள்ளைகள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகளைக் குறைத்து பிள்ளைகளுக்கு வாழ்வதற்கு மிகப்பொருத்தமான சூழலை உருவாக்குவதனை நோக்காகக் கொள்ளப்படுகின்றது. இவ் வயதுத்தொகுதியினையுடைய பிள்ளைகளுள்ள குடும்பங்களில் சமூகப் பிரச்சினைகளை இனம்காணும் போது கீழுள்ள விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

1) போசாக்கின்மையால் வாடும் பிள்ளைகளை இனம் காணுதல்.

2)தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளை இனம் காணுதல்.

3)தாய் வெளிநாடு சென்றுள்ள பிள்ளைகள் உள்ள குடும்பங்களை இனம் காணுதல்.

4)விசேட தேவையுடைய பிள்ளைகள் வாழும் குடும்பங்களை இனம் காணுதல்.

5)பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கையினை இனம் காணுதல்.

6)போதைப்பொருள், மற்றும் புகைத்தல் பாவணைக்கு பழக்கப்பட்டுள்ள பிள்ளைகளை இனம் காணுதல்

7)கையடக்கதொலைபேசி, கணனி, மற்றும் தொலைக்காட்சி போன்ற தொழில்நுட்ப உபகரணங்களை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு பழக்கப்பட்டுள்ள பிள்ளைகளை இனம் காணுதல்.

8)வீட்டுப் பணிகளில் (வேலைக்காரர்)ஈடுபட்டுள்ள சிறார்களை இனம் காணுதல்.

9)இள வயதில் திருமணமாகின்ற சிறுவர்களை இனம் காணுதல்.

## <u>மேற்படி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டான உத்தேச செயற்பாடுகள்</u>

1)சிறார்களின் சரியான போசனைகள் தொடர்பில் பெற்றோரை விழிப்பூட்டும் பொருட்டான போசனை வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

2)அண்மிய சூழலில் இலவசமாகவோ அல்லது குறைந்த விலையில் யோசனையுள்ள உணவு வேலை ஒன்றுக்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஆற்றல்கள் தொடர்பில் மக்களுக்கான விளக்கமும்அதன் முக்கியத்துவம் தொடர்பில் அறிவினை விருத்தி செய்தலும்.

3)பிள்ளைகளை பாதுகாப்பது தொடர்பில் தகப்பனின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் தொடர்பில் விளக்கமளித்தல்.

4)கிட்டிய வயது முதிர்ந்த பொறுப்பாளர்களின் கீழ் பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்வதும் பராமரிப்புக்கள் இல்லாத பிள்ளைகளை உரிய பிரிவுகளின் கவனத்திற்குக் கொண்டு வருதல், மற்றும் அவர்களின் நலனின் பொருட்டு வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்

5)14 வயது வரையிலான பிள்ளை ஒன்றுக்கு கல்வி கற்கும் உரிமை தொடர்பில் பெற்றோர்களை விழிப்பூட்டுவதும் அதன் பொருட்டு ஊக்குவிப்பதும்.

6)தொழில்நுட்ப உபகரணங்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில் பிள்ளைகளையும் பெற்றோர்களையும் விழிப்பூட்டுவது.

7)போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனை ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் தொடர்பில் சிறுவர்களுக்கான விளக்கங்களை விரிவாக மேற்கொள்ளல்.

8)சிறுவர் உரிமை பிரகடணம் தொடர்பில் பிள்ளைகளையும் பெற்றோரையும் விழிப்பூட்டுதல்.

9)சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்குள்ளாவதைக் குறைப்பதற்கு விழிப்பூட்டல்களை மேற்கொள்ளல்.

10)சரியான சம வயதுக் குழுக்களுடன் பழகுவதால் தன்னம்பிக்கையுள்ள சிறுவர்களை உருவாக்குதல் என்ற விடயம் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ) 18-35 இற்குமிடைப்பட்ட வயதுத் தொகுதியினையுடைய அங்கத்தவர்கள் மற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட குழுக்களை இனம்காணுதல்**

18 இற்கும் 35 வயதுக்குமிடைப்பட்ட வயதுத் தொகுதியினையுடைய அங்கத்தவர்கள் மற்றும் 35 வயதிற்கு மேற்பட்ட குழுக்களை வெவ்வேறாக இனங்காண்பது பொருத்தமானதாகும். குறித்த வயதுத் தொகுதிகளின் அங்கத்தவர்களுளுள்ள குடும்பங்களிடையே கீழுள்ள பிரச்சினைகள் உள்ள குடும்பங்களிலும் சமூக ரீதியாக முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளை சரியாக இனம்கண்டு அவற்றுக்கு தீர்மானங்களை வழங்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

1)வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை

2)போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ள அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்கள்

3)விதவைக் குடும்பங்களை இனம்காணுதல்

4)விசேட தேவையுடைய அங்கத்தவர்கள் வாழும் குடும்பங்கள்

5)மனைவி∴ கணவன் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்கள்

6)சிறந்த முகாமைத்துவமற்றதாக வாழும் குடும்பங்கள்

**மேற்படி பிரச்சினைகளைக் குறைக்கும் பொருட்டான உத்தேச செயற்பாடுகள்**

1)தொழில் வழகாட்டல் வேலைத்திட்டங்கள், தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் சுயதொழில்களில் ஈடுபடச் செய்தல்.

2)போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையானது தனிநபர் ஒருவரின் வாழ்க்கைக்கு ஏற்படுத்துகின்ற தாக்கங்கள் தொடர்பிலான விளக்கத்தினை விரிவாக்குதல்.

3)பெற்றோர் பிள்ளைகள் தொடர்பினை பலப்படுத்துதல்.

4)உளவியல் ரீதியான நன்மையினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5)வீட்டு முகாமைத்துவம் மற்றும் குடும்ப அபிவிருத்தி தொடர்பில் விளக்கத்தினை வழங்குதல்.

6)விசேட தேவைகள் அல்லது பிறிதொரு சமூக ரீதியிலான காரணங்களினால் பாதிப்பு நடந்த நிலைக்குள்ளாகியுள்ளவர்களின் நலனின் பொருட்டு செயற்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி வேலைத்திட்டத்தினை ஒழுங்கு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு:- மொத்தமாக மேற்படி குழுக்களின் பொருட்டு போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது போதையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாடொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக பொருட்டு கீழ் குறிப்பிட்ப்படும் துறைகள் தொடர்பில் விளக்கத்தினை விருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்துவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்

- போதைப்பொருள் பாவனை காரணமாக ஏற்படும் பொருளாதார சமூக மற்றும் சுகாதார ரீதியிலான பாதிப்புக்கள் தொடர்பில் விளக்கமளித்தல்
- கடைகளில் சிக்கரெட் விற்பனையினை நிறுத்துவதும், சட்ட விரோத போதைப்பொருள் உற்பத்தி மற்றும் அவற்றின் விற்பனையினை நிறுத்துவதும்.
- வைபவங்களில் போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையினை நிறுத்துதல்
- மனநோய் மற்றும் தற்கொலை முயற்சிகள் தொடர்பில் போதைப்பொருட்களில் உள்ள தாக்கங்கள் தொடர்பில் விளக்கத்தினை உறுதிப்படுத்துதல்

ஒவ்வொரு சமூகக் குழுக்களின் கீழும் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் சரியான தகவல்களை சேகரித்து மிக முக்கியமான பிரச்சினை அல்லது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடும் பொருட்டு ஆகக் குறைந்தது ஒரு பிரிவிற்கு ஒரு வேலைத்திட்டத்தினையாவது செயற்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு பல்வேறு திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதேச மட்டத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவியினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

வேலைத்திட்டத்தினை செயற்படுத்தும் போது கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் செலவுகளை மேற்கொள்ள முடியும்.

அரை நாள் வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்தும் போது

1)உபசரணைச் செலவுகள் (காலைத் தேநீரின் பொருட்டு ஒருவருக்கு) ஸ்ரீரூபா75.00

2)எழுதுகருவிகள் கலந்து கொள்ளும் ஒருவருக்கு (தேவைப்படின் மாத்திரம்) ஸ்ரீரூபா25.00

ஒரு நாள் வேலைத்திட்டம் ஒன்றினை செயற்படுத்தும் போது

1)உபசரணைச் செலவுகள் (காலை, மாலை தேனீர் மற்றும் பகலுணவின்பொருட்டு

ஒருவருக்கு) ஸ்ரீ ரூபா250.00

2)எழுதுகருவிகள் -கலந்து கொள்ளும் ஒருவருக்கு (தேவைப்படின் மாத்திரம்) ஸ்ரீரூபா25.00

வளவாளர் கொடுப்பனவினை செலுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் உரிய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கேற்ப செயற்படல் வேண்டும்.

## 02.சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் கழக மற்றும் கலாச்சார வேலைத்திட்டங்கள்

“சிறந்தவைகள் சிறுவர்களுக்கே” என்ற தலைப்பினை மெய்மையாக்கும் நோக்கில் 5 இற்கும் 18 இற்குமிடைப்பட்ட வயதினையுடைய பிள்ளைகளை கிராமிய மட்டத்தில் சிறுவர் கழகங்களில் ஒன்றினைத்து அவர்களுடன் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு சிறந்த அறிவோடு சவால்களை பொறுப்பேற்ககூடிய அபிமானமுள்ள சிறுவர் குழுவினை சமூகத்திற்கு வழங்குவதும் அவர்கள் நாட்டின் எதிர்காலத்தினைப் பொறுப்பேற்க கூடிய உண்மையானவர்களாக ஆக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை திட்டமிடுவதும் செயற்படுத்துவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஒவ்வொரு கிராமத்திலும் 5 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதினர்களை கலந்து கொள்ளச் செய்து செயற்பாடுள்ள சிறுவர் கழகமொன்றினை ஆரம்பிப்பதும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுவர் கழகங்களை புனரமைப்பு செய்தலும்
- சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்புகள் உட்பட்ட சிறார்களுக்கு செய்ய வேண்டியவைகள் மற்றும் உரிமைகள் தொடர்பில் பெற்றோர் மற்றும் பிள்ளைகளை விழிப்பூட்ட முறைப்படியான திட்டம் ஒன்றினைப் பின்பற்றுதல்.
- ஒவ்வொரு கிராமத்திலும் பிற அமைப்புக்களுடன் ஒன்றினைந்து சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதுடன் மற்றும் சிறுவர் பாதுகாப்பினை மேம்படுத்துவது தொடர்பில் விழிப்புனர்வு வேலைத்திட்டம் ஒன்றினைத் தயாரித்தல்.
- ஒவ்வொரு கிராமத்திலும் வாழும் சிறுவர்களின் பொருட்டு கலாச்சார மற்றும் அழங்காற்றல்கலைகள் மற்றும் மதிப்பீடுகளின் பொருட்டு கெக்குலு சிறுவர் கழக கலாச்சார போட்டிகளை பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் செயற்படுத்தும் பொருட்டு வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். (இதன் பொருட்டு குறித்த ஆலோசனைப் படிவம் னுனுனு.்ர்ழு.்07.்யுனு.்02.்சமுர்த்தி கெக்குலு என்ற இலக்கத்துடன் 2016-03-31ம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

### (அ) பாடசாலை செல்லும் வயதில் உள்ள இருப்பினும் பாடசாலை செல்லாத சிறுவர்களை பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு ஊக்குவித்தல்

பல்வேறு பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான பிரச்சினைகள் காரணமாக பாடசாலை செல்லும் வயதினையுடையதாக இருந்தும் ஆனால் பாடசாலைக் கல்வியில் ஆர்வமில்லாத பிள்ளைகளை இனம்கண்டு அவர்களது தேவையின் பொருட்டு தலையிட்டு அதற்காக ஒத்துழைப்புகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்காரக்கப்படுகின்றது.

### (ஆ) பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்

பல்வேறு பொருளாதார மற்றும் பிற சமூகப் பிரச்சினைகள் காரணமாக பாடசாலைக் கல்விக்குத் தேவையான அடிப்படை பாடசாலை உபகரணங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள பிள்ளைகளை இனம்கண்டு அவர்களது தேவைகளுக்கேற்ப பாடசாலை உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### (இ) சிசுதிரிய புலமைப் பரிசில் வேலைத்திட்டம்

செப்டம்பர் 08ம் திகதியில் நடைபெறும் உலக எழுத்தறிவு தினத்துடன் இணைந்ததாக வறுமையால் வாடும் சிறுவர்களை இனம்கண்டு அவர்களது கல்விக்கு ஊக்கமளிக்கும் நோக்கில் சிசுதிரிய புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினை இம்முறையும் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுகின்றது. 2015ம் ஆண்டில் இந்த வேலைத்திட்டம் மிகச் சிறப்பாக செயற்படுத்தப்பட்டதுடன் இவ்வாண்டிலும் ஆகக் குறைந்தது ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றிலிருந்து ஆகக் குறைந்தது ரூபா500.்ஸ்ரீ பெறுமதியினையுடைய ஒரு புலமைப்பரிசினையாவது வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது.

## 03.உளவளத்துனை மற்றும் தொழில் வழகாட்டல்கள்

மக்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகள் விருத்தியடைவதன் ஊடாக உள ரீதியான சுகாதார சீர்கேடுகள் மற்றும் அதன் ஊடாக பொருளாதார,மற்றும் பிற சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவதன் காரணமாக அபிவிருத்திக்கு தடையான சூழல் ஒன்று உருவாகியுள்ளது. இவ்வாறு இருக்கின்ற சமூக ரீதியான பிரச்சினைகளை இனம்கண்டும் மற்றும் அதற்கு உளவளத்துனையின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் தொடர்பில் களத்திலுள்ள உத்தியோகத்தர்களை விளக்கமளிப்பதும் அதனூடாக மக்களை சரியான வழிகளில் பயணிக்கச் செய்வதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய உளவளத்துனையின் ஊடாக மக்களது மனோபலத்தினை விருத்தி செய்து அவர்களை தங்கி வாழும் நிலையிலிருந்த மீட்டி நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய குழுவினர்களாக ஆக்கிக் கொள்வதும் அதனூடாக சிறந்த சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதுமே நோக்கமாகும்.

அதன் பிரகாரம் கள உத்தியோகத்தர்களின் பொருட்டு உளவத்துனை மற்றும் தொழில் வழிகாட்டலகள் தொடர்பில் முறையான பயிற்சி வேலைத்திட்டங்கள் தலைமைக்காரியாலயத்தின் மூலம் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது மேலும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் உளவள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொண்டு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் வேலைத்திட்டங்களை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுகின்றது.

## 04 சர்வதேச ஞாபகார்த்த தின வேலைத்திட்டங்கள்

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் விடயத்திற்குரிய சமூக ரீதியான பெறுமதியுள்ள சர்வதேச தினங்களைக் கொண்டாடும் பொருட்டு பயனுள்ள வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். அதன் கீழ் பின்வரும் சர்வதேச தினங்களில் அதன் தலைப்பினை அர்த்தமுள்ளதாக்கும் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

1) மார்ச் 08ம் திகதியில் நடைபெறும் சர்வதேச மகளிர் தினம்
2) மே 31ம் திகதியில் நடைபெறும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் (இது தொடர்பான குறித்த ஆலோசனைப் படிவங்கள் னுனுனு.ீர்மு.ீ07.ீளுனு.ீ06.ீகுனு என்ற இலக்கத்தின் கீழ் 2016-08-06ம் திகதியில் வெளியிடப்பட்டுள்ளது)
3) செப்டம்பர் 08ம் திகதியில் நடைபெறும் சர்வதேச எழுத்தறிவு தினம்
4) ஒக்டோபர் 01ம் திகதியில் நடைபெறும் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்

## 05 திரியபியச வீடமைப்பு வேலைத்திட்டம்

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வீடமைப்புப் பிரச்சினைகளுக்கு ஓரளவாவது பலத்தினை வழங்கும் பொருட்டு இதுவரையில் செயற்படுத்திய திரிய பியச வீடமைப்பு வேலைத்திட்டங்கள் இவ்வாண்டிலும் செயற்படுத்தப்படுகின்றது.

<u>தெரிவு செய்வதற்கான எடுகோள்கள்</u>

- பயனாளி காணியுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும்
- வீடொன்று இல்லாமை
- தற்காலிக அல்லது பாதுகாப்பற்ற வீடொன்றாக இருப்பது
- அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமாக இருப்பதும் அதிகமானோர் பெண் பிள்ளைகளாக இருப்பதும்
- பிரதான உழைப்பாளர் இறந்துள்ள குடும்பங்கள்
- திருமணமாகாத வயது வந்த பிள்ளைகள் உள்ள குடும்பங்கள்
- பெற்றோரை இழந்த பாடசாலை செல்லும் தமது பாதுகாப்பாளர்களாக பாட்டி,பாட்டன்மார்களுடன் தங்கி வாழும் பிள்ளைகள் உள்ள குடும்பங்கள்
- அரைவாசி பூர்த்தி செய்து அல்லது நிர்மான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்தும் கூட கட்டிமுடிக்க முடியாதுள்ள வீடுகள்.

வீட்டுக்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது மேற்படி எடுகோள்களின் கீழ் மிகப் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்தல் வேண்டும். புதிய வீடொன்றினை நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா 150000.ஃஸ்ரீ இற்கான தொகை ஒன்றினை இதன் கீழ் வழங்க முடியும் (இது தொடர்பான ஆலோசனைப் படிவம் னுனுனு.ஃர்ழு.ஃ07.ஃளுனு.ஃ06.ஃஐனு.ஃமகளிர் தினம் என்ற இலக்கத்தின் கீழ் 2016-03-01ம் திகதியில் முன் வைக்கப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடுகள், கட்டுநிதி என்பன மாவட்டங்களுக்கு வழங்கி முடிக்கப்பட்டுள்ளது )

இதற்கு மேலதிகமாக வீடுகளின் தேவைக்கேற்ப பிரதேச செயலாளரினதும் மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர்களினதும் சிபார்சு மற்றும் கோரிக்கைகளை தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பியதன் பின்னர் பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் நிதி ஒதுக்கீடு விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**(அ) வீடுகளைத் திருத்துதல்.**

வீட்டின் பகுதியொன்றினை நிர்மாணிப்பதாயின் அல்லது திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டான உதவித்தொகை வழங்கப்படுவதாயின் அதற்கு செலவிட வேண்டிய தொகையினை தேவைக்கேற்ப முறையான பிரகாரம் தீர்மானித்தல் வேண்டும்.

குறிப்பு:-வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிக்கும் போது பிரதேச செயலாளர், கணக்காளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், தலைமையக முகாமையாளர், மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளளர் ஆகியோர் கொண்ட குழு ஒன்றின் மூலம் தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டதன் பின்னர் செயற்படுத்தல் வேண்டும்.

## 06 துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறும் மக்கள் சிறந்த ஆரோக்கியமுள்ள வாழ்க்கை முறைக்கு பழக்கப்படுவதன் ஊடாக அவர்களது பிரத்தியேக தூய்மை உட்பட தொற்று நோய்களால் ஏற்படுகின்ற பாதிப்பு நிலைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு மிகப் பொருத்தமான பயனாளிகளை இனம்கண்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்து உயர்ந்த பட்சம் ரூபா15000.ஃஸ்ரீஎன்ற எல்லைக்கு உட்பட்டதாக கருத்திட்டங்களை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

## 07 விசேட தேவையுடையோர் நலன்புரி வேலைத்திட்டங்கள்

பல்வேறு உபாதை நிலைமைகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகின்ற மக்களின் தேவைக்கேற்ப அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டு உதவிகளை வழங்குதல், அல்லது வாழ்வாதார வேலைத்திட்டங்களின் பொருட்டு தொடர்புபடுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மிகப் பொருத்தமான பயனாளிகளை இனம்கண்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியத்திலிருந்து செயற்படுத்த உத்தேசித்துள்ளது.

## 08 மாதிரிக் கிராம வேலைத்திட்டம்

கிராமிய அபிவிருத்தியின் சவால்களை வெற்றி கொள்ளும் நோக்கில் நீண்ட காலமாக செயற்படுத்திய பல்வேறு வேலைத்திட்டங்களின் ஊடாக பொருளாதார இலக்கினை ஓரளவு மட்டத்திற்காவது உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்தும் சமூக அபிவிருத்தி சுட்டிகளில் பின்னடைவினைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த சவால்களை வெற்றி கொள்ளும் பொருட்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமையில் சகல நிறுவனங்களுடன் ஒன்றினைந்து மாதிரிக்கிராமங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் 2015ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஏதிர் வரும் 2 வருடங்களில் சமூக அபிவிருத்திச் சவால்களை வெற்றி கொண்ட மாதிரிக்கிராமங்கள் 25 ஐ மாவட்ட மட்டத்தில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் ஒரு கிராமம் ஏலவே தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனையும் மாதிரிக்கிராமம் ஒன்றாக கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை திட்டமிடவும் நடவடிக்ககைகளை மேற்கொள்ள வேண்டும். மொத்தமாக சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சகலதும் தெரிவு செய்யப்பட்டுள்ள மாதிரிக்கிராமங்களில் முன்னுரிமை வழங்கி இத் திட்டத்தினை செயற்படுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 09 முன்னேற்ற மீளாய்வு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல வேலைத்திட்டங்களும் 2016 நவம்பர் 30ம் திகதியில் முடிக்கப்படல் வேண்டும். இதற்கு சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முறையான பிரகாரம் செயற்படுகின்றதா என்பதனை கண்காணிப்பதும் பின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு ம் பிரச்சினைகளை மீளாய்வின் ஊடாக புதிய பிரேரணைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டும் பிரதேச, மாவட்ட, மற்றும் தேசிய மட்ட முன்னேற்ற மீளாய்வு வேலைத்திட்டங்களை செயற்படுத்த உத்தேசிக்கப்படுகின்றது.

### (அ) பிரதேச மட்டம்

சகல பிரிவுகளும் உள்ளடக்கப்படுகின்ற பிரகாரம் மாதாந்தம் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் முன்னேற்ற மீளாய்வுப் பட்டறையினை நடாத்துவதும் முன்னேற்றத்தினை மாவட்ட மட்டத்திற்கு வழங்குதலும்.

### (ஆ) மாவட்ட மட்டம்

பிரதேச செயலகங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர்கள், தலைமையக முகாமையாளர்கள், மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளர்களின் பங்கேற்புடன் மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ∴மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளரின் தலைமையில் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படல் வேண்டும். இக் கூட்ட அறிக்கையினை கூட்டம் நடைபெற்று ஒரு வாரத்திற்குள் தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

### (ஆ) தேசிய மட்டம்

மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர்களின் பங்கேற்புடன் ஒவ்வொரு 03 மாதத்திற்கொருமுறையும்,சமூக அபிவிருத்தி உதவியாளர்களும் உட்பட வருடத்திற்கு இரு முறையும் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட மட்ட பணிப்பாளர்களையும் தொடர்புபடுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்தும் சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதி ஒதுக்கீடுகளுடன் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் செயற்படுத்தப்படுகின்ற சகல வேலைத்திட்டங்களினதம் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தினை சரியாக இணைக்கப்பட்டுள்ள 05ம் இலக்க இணைப்பிற்கேற்ப ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் தலைமைக் காரியாலயத்திற்கு வழங்குவது அத்தியவசியமானதாகும். குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு வேலைத்திட்டத்தினையாவது செயற்படுத்தல் வேண்டும் என்பதுடன் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ள கூடியவாறு சகல தரவுகள், தகவல்கள், மற்றும் புகைப்படங்களைத் தயாரித்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

## சமூக அபிவிருத்தி மன்ற செயற்பாட்டிற்கான ஆலோசனைகள்-2016

சமுர்த்தி அதிகார சபையின் கீழும் அதன் பின்னர் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழும் செயற்படும் சமூக அபிவிருத்தி மன்றத்தின் செயற்பாடுகளின் பொருட்டு நிதிய மூலங்கள் செய்யப்பட்டிருப்பது சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினைத் தலைப்பாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கொடி விற்பனை மூலமாகும். சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற புகைத்தல் எதிர்ப்பு கொடி வேலைத்திட்டத்தின் தலைப்பானது புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையினால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக ரீதியான பாதிப்புக்கள் தொடர்பில் வீடு வீடாகச் சென்று மக்களை விழிப்பூட்டுதல் மற்றும் போதைப்பொருள், புகைத்தல் பாவனைக்காக செலவாகும் தொகையினை அவர்களதும் நாட்டினதும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதேயாகும் ஆகையினால்இந்த நிதியத்தினை முக்கியமாக சமூக அபிவிருத்திச் சவால்களை வெற்றி கொள்ளும் நோக்கில் செயற்படுத்தும் வேலைத்திட்டங்களின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு கூடிய கவனத்தினைச் செலுத்தல் வேண்டும்.

சமூக அபிவிருத்தி மன்றத்தின் நிதியங்களை செலவழிக்கும் பொருட்டு குறித்த நிதியாண்டினைஅடிப்படையாகக் கொண்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்வாங்கப்படுகின்ற பிரகாரம் செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரித்து இணைப்பு 03இல் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நிதி எல்லைகளின் கீழ் சமூக அபிவிருத்தி மன்றத்தின் அங்கத்தவர்களது இணக்கப்பாடு மற்றும் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் செயற்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்படுகின்ற செயற்பாட்டுத் திட்டமிடலின்பிரதி ஒன்றினை மாவட்ட செயலகத்தின் ஊடாக தலைமைக்காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இணைப்பு இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நிதி எல்லைகளைத் தாண்டிச் செல்லும் சந்தர்ப்பங்களில் மாவட்டச் செயலாளரினதும் மாவட்ட செயலாளரின் சிபாரிசின் பிரகாரமும் வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

<u>செயற்பாட்டுத் திட்டமிடலைத் தயாரிக்கும் போது கீழுள்ள விடயங்கள் தொடர்பில் கவனத்தினைச் செலுத்துகின்றேன்</u>

I. குறிப்பிட்ட நிதியாண்டு (2016-01-01 முதல் 2016-12-31ம்) உள்ளடங்குகின்ற பிரகாரம் செயற்பாட்டுத் திட்டமிடலைத் தயாரித்தல்.

II. இச் சுற்றறிக்கையின் இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1-8 வரையான வேலைத்திட்டங்களுக்கு மாத்திரம் தேவைக்கேற்ப மன்றத்தின் நிதியங்களை செலவிட வேண்டியதுடன் இணைப்பு இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நிதி எல்லைகளுக்குள் செயற்படல் வேண்டும்.

III. ஒவ்வொரு வருடமும் மன்றத்தின் வருமானங்களிலிருந்து 80மூமாவது குறித்த வருடத்தில் மேற்படி வேலைத்திட்டங்களுக்காக செலவிடப்படல் வேண்டும்.

IV. வேலைத்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட தனியார் கொடை வள்ளல்களின் தலையீட்டுடன் பெற்றுக் கொள்ளப்படும். உதவித்தொகைகளையும் உள்ளடக்கிக் கொண்டு செயற்பாட்டுத் திட்டமிடலைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு பிற நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிதியங்கள் தொடர்பான விபரங்களை பதிதல் வேண்டும்.

V. செயற்பாட்டுத்திட்டமிடல் உள்ள சகல வேலைத்திட்டங்களின் பொருட்டு தனித்தனியாக விபரங்களுடனான மதீப்பீடு ஒன்றினைத் தயாரிக்க வேண்டியதுடன் அதற்குறிய அங்கீகரிக்கின்ற மேலதிகாரிகளின் அங்கீகராத்தினைப் பெற்றுக்கொண்டு அதன் பிரகாரம் செயற்படல் வேண்டம்.

VI. முன்னேற்றத்தினை அறிக்கையிடும் போது இணைக்கப்பட்டுள்ள 05ம் இலக்க மாதிரிப் படிவ இணைப்பிற்கமைய முன்னேற்றத்தினை ஒவ்வொரு மாதமும் 10ம் திகதியில் மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் ஊடாக தலைமைக்காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு:- சமூக அபிவிருத்தி மன்றத்தின் கணக்கீட்டு நடவடிக்கைகள் திணைக்கள முறைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டி இருப்பதனால் கணக்கினை பராமரித்துச் செல்லும் போது கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

- சமூக அபிவிருத்தி மன்றத்தின் கணக்குகள் பிரதேச செயலகத்திற்கு கிட்டியதாகவுள்ள சமுர்த்தி வங்கியில் வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் தலைமையதிபதியின் பெயரில் அங்கத்தவரல்லாதோர் கணக்கொன்றினைப் பராமரித்துச் செல்ல வேண்டியதுடன் வங்கி கையேட்டினை சரியாகப் பேணி வரல் வேண்டும்.
- மன்றத்தின் கணக்கு நடவடிக்கைகளை பதிந்து வைக்கும் பொருட்டு காசேடு ஒன்றினைப் பயன்படுத்தல் வேண்டும்.
- மன்றத்தின் நிதியினை செலவிடும் பொழுது ஒவ்வொரு கொடுப்பனவும் பற்றுச்சீட்டு மூலமாகவே செலுத்துதல் வேண்டும், என்பதுடன் அதற்குரிய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய கோவையொன்றினை பராமரித்தல் வேண்டும்.
- ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கொருமுறை சமூக அபிவிருத்தி மன்றம் கூடியிருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டத்திலும் குறித்த கூட்ட அறிக்கையினை தயாரித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.
- கூட்டத்தில் கலந்து கொண்டோரின் கையெழுத்துக் கோவை ஒன்று பராமரிக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு மாதத்திற்கொருமுறையும் பரீட்சை மீதி அறிக்கை ஒன்றினைத் தயாரிக்க வேண்டியதுடன் மாவட்டச் செயலகத்தின் ஊடாக தலைமைக் காரியாலயத்திற்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.